பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆவணி 7 (22—8—68) வியாழன் ★ வெளியூர்: ஆவணி 8 (23—8—68) வெள்ளி [இதழ்: 58

## ஹேமாவதி அணை

### கொள்கையளவில் மத்திய அரசு ஒப்புதல்!

புதுடில்லி, ஆக. 21—

ஹேமாவதி அணைத் திட்டம் பற்றி மைசூர்—தமிழகத்திற்கிடையில் பொதுவாக உடன்பாடு ஏற்பட்டிருப்பதையடுத்து, இந்தத் திட்டத்தை மத்திய அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருக்கிறது.

திரட்டப்படவிருக்கும் விவரங்களையும், தகவல்களையும் ஒட்டி இந்தத் திட்டத்தின் விவரங்கள் வகுக்கப்படும்.

### மீண்டும் இரும்புத் திரை?

# இரஷ்யா ஆக்கிரமிப்பு-- செக் மக்கள் குமுறல்-- உலக நாடுகள் அதிர்ச்சி

பிரேக் நகரம்:—பன்னிரண்டே வயதுச் சிறுவன். மனித பலத்துக்கு அப்பாற்பட்ட சோவியத் டாங்கியை ஏதும் செய்துவிட முடியாதுதான்; ஆனாலும், உணர்ச்சி அலைகள் மோதுகின்றன; கையில் கிடைத்ததையெல்லாம் வாரி அந்த டாங்கிமீது வீசுகிறான்; மலையின் மீது சிறு துரும்பு பட்டால் என்ன செய்துவிட முடியும்? உருண்டு ஓடுகிறது டாங்கி! சிறுவன், கோபத்தின் மொத்த உருவமாய் ஓடிச் சென்று அதனைத் தடுக்கப் பார்க்கிறான்!

இது, வேறு இடம் -- செக் நாட்டின் வானொலி நிலையம்--சோவியத் படைகள் ஆயுதப் பலத்துடன் நுழைகின்றன! வெறுங் கையுடன் நின்றாலும், கோபம் கொப்பளிக்க செக்கோஸ்லோவேகிய மக்கள் கூடி நின்று -- இரஷ்ய இராணுவத்தினரின் முகத்தை நோக்கி -- 'சீ, சீ' எனக் காறி உமிழ்கின்றனர் --- அவர்களால் முடிந்தது அவ்வளவுதான்!

இது, பிராடிஸ் லாவா --- செக் நாட்டின் மற்றொரு தலைநகா:---சோவியத் நாட்டின் டாங்கிகள், மலைகள் இடம்பெயர்ந்து வருவதுபோல் உருண்டு வருகின்றன! ஆயிரக்கணக்கான 'செக்' மக்கள் அப்படியே பாதையில் படுத்து மனித மலையினை உருவாக்குகிறார்கள்! 'நம் உயிரைக் குடித்துவிட்டு நாட்டுக்குள் போகட்டும்' என்ற எண்ணம்; அல்லது, 'டாங்கிகளைத் தடுத்து நிறுத்திவிடலாம்' என்ற 'ஆசை'யாகக்கூட இருக்கலாமோ!

இதுவும், பிரேக் நகரின் மற்றொரு இடம்— 'யானைப் பசிக்குச் சோளப் பொரி' என்பதுபோல், அணிவகுத்து வரும் சோவியத் படையின் ஒரு இயந்திரத் துப்பாக்கி நடைபாதையில் இருந்த ஒரு அபலைப் பெண்ணின் உயிரைக் குடிக்கிறது;

இது, செக் நாட்டின் விண்வெளி; வானொலியின் அலைகுரல் இப்படி ஒலிக்கிறது:—

> "தேசிய கீதத்தை நீங்கள் எந்த நிமிடம் கேட்கிறீர்களோ — உடனே நீங்கள் முடிவுசெய்து கொள்ளலாம் — 'எல்லாம் முடிந்துவிட்டது' என்று!"

அதனடுத்த அடுத்த வினாடியே ஒலிக்கிறது தேசியகீதம்! சிற்றுண்டிச்சாலைகளில் --- கடைகளில் --- நடைபாதைகளில் அந்த ஒலியினைக் கேட்ட செக் மக்கள் தேம்பி அழுகின்றனர்! தேற்றுவாரற்று அரற்றுகின்றனர்! பொருமுகின்றனர்! சோவியத் டாங்கிகளைக் காணும் போதெல்லாம் அடிவயிறு வலிக்க எதிர்ப்புக் குரல் எழுப்புகின்றனர்!

இதற்கும் சற்று முன்னால், 'பிரேக்' நகர வானொலியில் கேட்ட குரல் இது:—

> "இது, செக் மக்களுக்கு விடுக்கப்படும் கடைசி வேண்டுகோள்; வதந்திகளை நம்பாதீர்; ஏனெனில், எதிரியின் வசமும் ஒரு வானொலி இருக்கிறது; இரஷ்யப் படைகள் பல நகரங்களைப் பிடித்துவிட்டன; இறுதி முடிவு நெருங்குவதாகத் தெரிகிறது; இதோ.......துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது......முடிவு இதோ....வந்துவிட்....தலைவர் துப்சேக்....துப்...சேக்...துப்சேக்...."

புதன் கிழமை காலை 3-30 மணியளவில் போலந்து, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, பல்கேரியா ஆகிய நாடுகளின் படைகள் -- இரஷ்யத் தலைமையின் கீழ் -- எல்லையைத் தாண்டி நுழைந்து, 'செக்' நாட்டில் ஆக்கிரமிப்பு நடத்தியதையொட்டி, அடுத்த சில மணித்துளிகளில் அந்த நாட்டு மக்களின் மனப்போக்கினைக் காட்டும் வகையில் நிகழ்ந்த காட்சிகளின் தொகுப்பே மேலே தரப்பட்டிருப்பது!

ஆனால், மாஸ்கோவிலிருந்து வரும் அறிவிப்போ,

> "அழைப்பு வந்தது -- படை அனுப்பப்பட்டது"

எனத் தெரிவிக்கிறது. இது எவ்வளவுக்கு இட்டுக்கட்டிய ஒன்று என்பதனைக் காட்டவே, உணர்ச்சிகள் கொப்பளிக்கும் சம்பவங்கள் சில மேலே தரப்பட்டுள்ளன.

தென்னை மரத்தைச் சுற்றிக் கீழே கூட்டம் கூடிவிட்டது; உயரே இருந்த திருடனுக்கோ, தேள் கொட்டியதுபோல் ஆகிவிட்டது; 'ஒன்றுமில்லை; புல் பறிக்க உயரே வந்தேன்' என்றானாம்!

'செக் நாட்டின் அமைதியைக் காப்பதற்கு' எனக் கூறி இரஷ்யா, உலகின் மூலை முடுக்குகளையெல்லாம் கவர்ந்திழுக்கும் ஆக்கிரமிப்பு ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தியிருப்பது, தென்னை மரத்தில் புல் பறிக்க ஏறிய திருடன் கதையாகத்தான் இருக்கிறது!

"சோஷலிச இலக்கினை எட்டுவதற்குக் கம்யூனிச நாடுகள் தங்கள் தங்கள் விருப்பம்போல முயலலாம்; அதற்குக் குறுக்கே இரஷ்யா வராது" என்ற ஓர் ஒப்பந்தம் வார்சா கூட்டு நாடுகளுக்குள் ஏற்பட்டு, அது, செய்தியாக உலகின் நாலா பக்கங்களுக்கும் எட்டுவதற்கு முன்பாக, 'செக் நாட்டின் சீர்திருத்தக் கொள்கைகள், கம்யூனிசக் கூட்டுக்கு ஆபத்து' எனக் கூறிக்கொண்டு இரஷ்யா -- இப்படி ஓர் ஆக்கிரமிப்பினைத் தொடுத்திருப்பது -- 1956 நவம்பர் 4-ந் தேதியினைத்தான் நினைவுபடுத்துகிறது.

### அன்று -- ஹங்கேரி! இன்று -- செக்கோசுலேவேகியா!

"இடையில் 12 ஆண்டுகள் கடந்திருப்பது, பின்னோக்கி நடைபோடும் இந்த 'முன்னேற்ற'த்தைப் பெறுவதற்குத்தானா" என்ற சந்தேகத்தினைத்தான் பார்வையாளர்களுக்குத் தருகிறது!

"செக்கோசுலேவேகியாவும் ஒரு ஹங்கேரிதான்" என, இரஷ்யா மதிப்பிடலாம்; ஆனால் 1968-ம் ஆண்டு, 1956-ம் ஆண்டாகிவிட முடியாதே!

'சீர்திருத்தம்' என்ற கருத்தில் செக் நாட்டில் அறிமுகப்படுத்தப்படும் சில 'தளர்வுப் போக்கு'கள் — 'உரிமைச் சலுகை'கள் — இரஷ்யாவுக்கு, 'ஏகாதிபத்தியத்தின் தூண்டுதலாக'த் தென்படுகிறதென்றால், இப்போது நடந்திருக்கும் இரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகளும், உலகின் மற்ற நாடுகளுக்கு ஆக்கிரமிப்புச் செயலாகத்தான் தென்படுகிறது!

முன்பெல்லாம் இப்படிக் கூறுவது வழக்கம் -- இந்தியக் கம்யூனிஸ்டுகளைப் பற்றி -- 'பீகிங்கிலோ, மாஸ்கோவிலோ இடி இடித்தால், இங்கே மழை பெய்யும்' என்று!

(4-ம் பக்கம் பார்க்க)

### கழகத் தோழர்கள் கவனத்திற்கு:

## கட்டுப்பாடு காப்பீர்!

அண்மைக் காலமாகக் கழகத் தோழர்களில் ஒரு சிலர், கழகக் கட்டுப்பாட்டினைச் சீர்குலையச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும், அவர்கள் மீது முறைப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் கழகத்தின் பொறுப்புடைய உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

கழக வளர்ச்சி -- கட்டுப்பாடு -- கடமை உணர்ச்சி ஆகியவைகளைவிட, தங்களின் சொந்த ஆசாபாசங்களே பெரிதெனக் கருதி ஒரு சில கழகத் தோழர்கள், தம்மையும் அறியாமல் உணர்ச்சிவயப்பட்டு எடுக்கும் முடிவுகளிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறோம்.

அறிஞர் அண்ணா அவர்கள் காட்டிவரும் பொறுமையினையும் அன்பினையும் பயன்படுத்திக்கொண்டு, தாங்கள் செய்துள்ள தவறுகளைத் திருத்திக்கொள்வதற்குப் பதிலாக, மேலும் முறைகெட்ட செயல்களில் கழகத் தோழர்கள் யார் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் மீது கழகம் முறைப்படி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கட்டுப்பாட்டினைச் சீர்குலையச் செய்யும் சில தீய முயற்சிகளுக்குத் தெரிந்தோ தெரியாமலோ இரையாகும் சில கழகத் தோழர்கள், இனியாவது திருந்துவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## தமிழக அரசின் பொருளாதாரக் கொள்கை

### மத்திய அரசு வழியில் சென்றாலும் தனி முத்திரை பதிக்கப்படும்

### சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, ஆக. 21—

"இந்த மாநிலத்தின் பொருளாதாரக் கொள்கை என்ன?"

என்று சட்டமன்றத்தில் கே. விநாயகம் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறியதாவது:—

"மாநிலத்திற்கென்று தனியாக பொருளாதாரக் கொள்கை இருக்கமுடியாது என்று உறுப்பினருக்குத் தெரிந்திருக்கும்; மத்திய அரசு வகுக்கும் பொருளாதாரக் கொள்கை வழியைத்தான் இந்த மாநிலம் பின்பற்றிச் செல்ல வேண்டியிருக்கிறது. இருப்பினும், மாநில அரசு பொருளாதாரத் துறையில் தனக்கென்று ஒரு முத்திரையை வைக்கவேண்டியிருக்கிறது.

"மாநிலத்திற்கென்று பொருளாதாரக் கொள்கை வகுப்பதானால், தொழிலாளர்களுக்கு முழு வேலை வாய்ப்பு---கட்டுப்பாடில்லாத வேலைவாய்ப்பு---தொழிலாளர்கள் நலன்---பொருளாதார மறுமலர்ச்சிக்கு ஊக்கமூட்டும் செயல் முறைகள்---இவையே முக்கிய நோக்கமாக இருக்கும்.

"கோயமுத்தூர் பஞ்சாலைகளில் ரூ. 5 கோடிக்குக் கூடுதலாக மதிப்புள்ள தேங்கிக்கிடக்கும் நூல்களை மத்திய அரசு வாங்கிக் கொள்ள ஒப்புதல் தெரிவித்திருக்கிறது.

"மத்திய அரசு ஒப்புக்கொண்ட ரூ. 5 கோடி உதவித் தொகை இன்று காலை அரசுக்குக் கிடைத்துவிட்டது, இது நமக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாகும்."

## நன்கொடையாகப் பல இலட்சங்கள்!

### காங்கிரசை ஆதரித்த பத்திரிகைகள் பெற்றன!

புதுடில்லி, ஆக. 21—

புதுடில்லியிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழான 'பேட்ரியாட்'டும், அதன் துணை ஏடான 'லிங்க்'கும், நன்கொடை என்ற பெயரால் இலட்சக்கணக்கில் பணம் பெற்றிருக்கின்றன!

இத்தகவலை, துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாயே நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

1963—64-ம் ஆண்டுக்கு 1966—67-ம் ஆண்டுக்கும் இடை

(4-ம் பக்கம் பார்க்க)

# பக்தவத்சலனார் உருவாக்கிய 'தரமான' எதிர்க் கட்சி

## பழைய முறைகளையே பின்பற்றும் வேதனை!

சென்னை, ஆக. 20—

"அனுமதிக்கப்பட்ட சனநாயகத்தில் நாங்கள் பல ஆண்டுகளாக எதிர்க் கட்சியாக இருந்தவர்கள்; எனவே, எங்களிடத்தில் நீங்கள் பாடம் கற்றுக்கொள்ளவும், பல ஆண்டுகளாக ஆளும் கட்சியாக இருந்த உங்களிடத்திலே நாங்கள் பாடம் கற்றுக் கொள்ளவும் வேண்டும்; அதுதான் முறை. அதனால்தான், நாம் இங்கு, தொட்டுக் கொள்ளக்கூடிய தூரத்தில் அமர்ந்திருக்கிறோம்.

"காங்கிரசு இன்று எதிர்க் கட்சியாக இயங்குவதைப் பார்க்கும்போது, முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், 'நாட்டில் தரமான எதிர்க் கட்சி இல்லையே; எதற்கெடுத்தாலும் கறுப்புக் கொடியா — உண்ணாநோன்பா — போராட்டமா — என்று கேட்டதுதான் நினைவுக்கு வருகிறது!

**"ஆனால், 'மிகப் பெரியவர்கள் மிகச் சாதாரணமானவர்களை எதிர்த்து எதிர்க் கட்சியாக இயங்கும்போதும் பழைய முறைகளைத்தானே கையாளுகிறார்கள்' என்கிறபோது வேதனையாகத்தான் இருக்கிறது.**

"அன்று அவர்கள் எங்களுக்குச் சொன்னார்கள் — 'இப்படி ஆர்ப்பாட்டம் நடத்தாதே; பொதுமக்களிடம் சென்று முறையிடு; மக்கள் அனுமதியுடன் ஆட்சியை மாற்ற வாய்ப்பு இருக்கும்போது ஏன் ஊர்வலம் — ஆர்ப்பாட்டம் — கறுப்புக் கொடி — உண்ணாநோன்பு' என்று கேட்டார்கள்.

"இப்போது நான் அவர்களிடம் அதனையே திருப்பிக் கூறலாம்; ஆனால் அப்படிக் கூறவில்லை. ஒன்று மட்டும் எனக்குத் தெரிகிறது; ஆளும் கட்சியாக இருக்கும் போது அப்படிப் பேசவேண்டியிருக்கிறது — எதிர்க் கட்சியாக இருக்கும்போது இப்படிப் பேசவேண்டும் போலிருக்கிறது"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்ற மேலவையில், நிதி ஒதுக்கல் மசோதா விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:—

"சட்டமன்றக் கூட்டம் நடைபெறும்போது ஊர்வலம்— உண்ணா நோன்பு—என்று வருவது விரும்பத்தக்கதல்ல; தேவையற்றது' என்ற கருத்தைத் தெரிவித்த எதிர்கட்சித் தலைவருக்கு எனது நன்றி. 'குறையிருந்தால் பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்க்க வேண்டும்' என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

என்றுமே ஆட்சியில் இல்லாத நாங்கள் இப்போது ஆட்சிக்கு வந்திருக்கிறோம்; நீங்கள் எதிர்க் கட்சியாக ஆகியிருக்கிறீர்கள்.

உங்களுக்கும் எதிர்க் கட்சியாக இருப்பதில் அனுபவம் இல்லை; எங்களுக்கும்—ஆளும் கட்சியாக இருப்பதில் அனுபவம் குறைவு......

தியாகராசன்:—"நாங்கள் பிரிட்டிஷ்காரன் காலத்தில் எதிர்க் கட்சியாக இருந்திருக்கிறோம்."

முதலமைச்சர் அண்ணா:— "அன்றைய எதிர்க் கட்சி— ஆளும் கட்சி முறை வேறு. பிரிட்டிஷ்காரன் காலத்தில் எதிர்க் கட்சியாக இருந்தபோது சத்தியமூர்த்தியும், புலாபாய் தேசாயும் எப்படிப் பேசினார்கள் —நடந்துகொண்டார்கள் என்பதை நான் படித்து அறிந்துகொண்டுதான் பேசுகிறேன்."

### தொழிற் சங்கத் தலைவர்கட்கு:

தொழிலாளர் தலைவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்; ஆயிரம்பேர் ஊர்வலம் வரும்போது இடையிடையே தொழிலாளர் தலைவர்கள் இருந்து பார்த்துக்கொள்ளும்போதும் சொல்லத்தகாத 'கோஷங்'களைச் சிலர் சொல்கிறார்கள்; செய்யத்தகாதவற்றைச் சிலர் செய்கிறார்கள்; இது குறித்துத் தொழிற் சங்கத் தலைவர்களை நான் அழைத்துக் கேட்டேன்; 'எங்களையும் மீறி அப்படி நடந்துவருகிறது' என்று பதிலளிக்கப்பட்டது.

சென்னைச் சுற்றுப்புறத்தில் உள்ள ஒரு தொழிற்சாலையில் ஒரு தொழிற்சங்கத் தலைவர் ஒரு முறையைக் கையாண்டார். பெண் தொழிலாளிகளை நிற்கச் செய்து — அவர்கள் கைகளில் கூட்டுக்கோல் கொடுக்கப்பட்டிருந்தது; உள்ளே போன தொழிலாளரைப் பார்த்து அந்தப் பெண்கள், 'உள்ளே போனால் இதனால் அடி விழும்' என்று கூட்டுக்கோலைக் காட்டினார்கள்!

தொழிலாளர்கள் ஒன்றை உணர வேண்டும் — இதெல்லாம் அவசியந்தானா என்பதை!

தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டங்கள் கெட்டிப்பட்டு வரும் காலம் இது! அவற்றை உறுதிப்படுத்தும் அரசும் ஆட்சி நடத்துகின்றது!

நான் எப்படி, போலீசு அத்துமீறி நடந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றேனோ, அதுபோல அத்துமீறி நடக்கும் தொழிலாளரைத் தொழிற் சங்கத் தலைவர்கள் விலக்கிவைக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கூலித் தகராறுகள் பற்றி காசிராமன் குறிப்பிட்டார். அவர்களைச் சந்தித்துப் பேசித் தீர்வுக்கு வர இரவு பகலாக நான் காத்துக்கிடக்கிறேன்.

ஒரு நிலக்கிழார் வீட்டுமுன் கூடி காமன் பண்டிகை காலத்தில் செய்வார்களே— அப்படி மாரடித்து அழுதிருக்கிறார்கள்! இப்படி செயவதாலா உரிமைகள் பாதுகாக்கப்படும்? மேடைகளில் கண்டபடி ஏசிவிடுவதால் தொழில் தகராறுகள் தீருமா?

நானும் தொழிற்சங்க இயக்கத்தில் இருந்திருக்கிறேன்; திரு. வி. கலியாணசுந்தரனார் காலத்தில்பக்கிங்காம்கர்னடிக் ஆலைத் தொழிலாளர் சங்கத்திலும், ஏ. எஸ். கே. அய்யங்கார் வருவதற்கு முன்னதாக துறைமுகத் தொழிலாளரிடையேயும் பணியாற்றி இருக்கிறேன்; அப்போது நடந்த தொழிலாளர் கிளர்ச்சிகளுக்கும் — இப்போது நடப்பவற்றுக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் அவ்வப்பொழுது விவசாயத் தொழில் தகராறுகள் ஏற்பட்டபோது அவற்றைத் தீர்ப்பதில் அங்கேயுள்ள தி. மு. க., தி. க., வலது— இடது கம்யூனிஸ்டு, பி. சோ. ஆகிய கட்சியினர் ஒத்துழைத்து இணக்கமும் காட்டினர். அவர்களுக்கெல்லாம் நன் நன்றி.

தஞ்சைத் தரணியில் விவசாயப் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தொடர்ந்து முயற்சிகள் எடுத்துக் கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### வேறு எதற்குத்தான் உதவப் போகிறீர்கள்?

புதிய வருவாய் பற்றி இங்கு குறிப்பிட்டார்கள்; புதிதாக வரி எதற்குப் போடலாமென்று சொல்லி உதவுங்கள். 20 ஆண்டுகளாக ஆண்டவர்கள் இதில் உதவாவிட்டால் வேறு எதில் உதவப் போகிறீர்கள்?

### துப்புத் துலக்கத் தனிப் போலீசு!

மாநிலப் போலீசுத் துறையினரின் திறமை பற்றிக் குறிப்பிட்டு கொள்ளையரைப் பிடிப்பதில் அவர்கள் காட்டிய திறமையையும் காசிராமன் (காங்கிரசு) பாராட்டினார். அவருக்கு, 'இந்தத் துறையை நிர்வகிப்பவன்' என்ற முறையில் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாராட்டிய அவர், அடுத்து, சஞ்சை மாவட்ட தீ வைப்புகளைப பற்றிக் குறிப்பிட்டார். இந்த குற்றங்களைக் கண்டுபிடிககத் தடையாக உள்ளவை, தடயங்களும் உடன் எரிந்து சாம்பலாகிவிடுவது ஆகும்......

கே. விநயகம்:— 'நாய்களை அனுப்பலாமே!"

அண்ணா:—"பொருள்கள் எரியும் இடததிலிருந்து நாய்களால் மோப்பம் பிடிக்க இயலாது"

தீ வைப்புக் குற்றவாளிகள் பிடிபடாமல் இருப்பதற்கு போலீசாரின் உற்சாகக் குறைவோ, திறமைக குறைவோ காரணமல்ல; அவசியமானல் ஒரு தனிப் போலீசுப் பிரிவையும ஏற்படுத்திக் கண்டுபிடிக்கச் செய்வோம. அவர்களது திறமையில் குறை காணாது நமபிக்கை வைக்கவேண்டும்.

அதே சமயத்தில், அத்துமீறி நடந்து போலீசார், மரியாதைக் குறைவாக மக்களிடம் நடந்துகொள்ளக்கூடாது என்ற வாதத்தை நான் ஏற்றுக்கொண்டு, மக்களிடம் மிகுந்த மரியாதை காட்டும்படி நான் வேண்டுகோள் விடுகிறேன்.

ஒருவர் இருவர் மரியாதைக் குறைவாக நடந்தார்கள் என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப் பட்டால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க நான் தவறமாட்டேன் என்று தெரிவிததுக் கொள்கிறேன்."

# முன்னாள் அமைச்சரின் பொருந்தாக் குற்றச்சாட்டு

சென்னை, ஆக. 20—

முதலமைச்சர் அண்ணா:—"சிங்கம்புணரியில் மருத்துவமனைக் கட்டிட விரிவாக்கம் என்கிற பொதுக் காரியத்துக்குக் கூட்டுறவு நிறுவனங்கள்—தங்கள் பொது நிதியிலிருந்து— பண உதவி செய்யலாம் என்று அதிகாரி ஒருவர் அனுப்பிய உத்தரவை முன்னாள் அமைச்சர் பூவராகன் இங்கு படித்துக்காட்டினார். முதலில், 'அமைச்சர் உத்தரவிட்டார்' என்று சொல்லிப் பேச்சைத் துவககிய அவர் கடைசியில், அதிகாரி ஒருவரது உத்தரவைப் படித்திருக்கிறார்; இது, பொருந்தாத வாதம். பூவராகன், அமைச்சரைப் பற்றிக் கூறுது இருந்திருப்பாரானால் அவரது பேச்சு தரமானதாக இருந்திருக்கும். அந்த அதிகாரியின் உத்தரவும் சரியானதே; முறைகேடாகவோ, விதிகளுக்கு மாறாகவோ இதில் ஏதமில்லை. 'இன்னின்ன விதிகளின்படி, பொது நன்மைக்கென்று நிதி அளிக்கலாம்' என்ற வேண்டுகோளை அந்த அதிகாரி வெளியிட்டுள்ளார். இதை அமைச்சர் செய்தார் என்பது பொருந்தாது."

பூவராகன்:—"அமைச்சரின் இலாகாவில் நடந்துள்ளது; அமைச்சருக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்பது சரியாகுமா?"

அண்ணா:—"அமைச்சரைப் பற்றிக் கேட்பதானால், 'முன்னால் இப்படியெல்லாம் நடக்கவில்லையா?' என்று எங்கே நாங்கள் கேட்டுவிடுவோமோ என்று அப்படிக் கேட்காதீர் என்று அணை போட்டுக் கொண்டுதான், விவாதத்திற்கு வந்தார். முன்பு தவறு நடக்கவிலலை என்று மார் தட்டிக் கூறமுடியுமா? இப்படிக் கேட்பதால், அதையே நாங்களும் செய்யவேண்டுமென்று கருதுவதில்லை."

"நண்பர் கருத்திருமன், முன்பு ஒருமுறை சொன்னார் —'தவறு செய்ததால் நாங்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறோம்; நீங்களும் அப்படிச் செய்யாதீர்கள்' என்று!

"நல்ல காரியங்களுக்குப் பொதுப் பணத்திலிருந்து பணம் கொடுப்பதென்பது, பூவராகன் அறியாதது அல்ல; விருத்தாசலம் கல்லூரிக்குப் பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து கொடுக்கவில்லையா? அரியலூரில் அவ்வாறு செய்யவில்லையா? 'எங்கள் காலத்தில் செய்வோம்; உங்கள் காலத்தில் செய்யக்கூடாது' என்று பொருத்தமற்றுப் பேசக்கூடாது.

"முன்னாள் முதலமைச்சரை எடுத்துக்கொள்வோம்; அவர் தொகுதியில் எத்தனைப் பொதுக் காரியங்கள் நடந்துள்ளன? அந்த மாவட்டத்து வாசி என்கிற முறையில் அதை அறிந்துள்ள நான் மகிழ்ச்சியடைந்திருக்கிறேன்.

"சிங்கம்புணரி என்பது— இலக்கிய ஆர்வமுடையோர் அறிவர்—பாரியும், பாரி மகளிரும் வாழ்ந்திருந்த பகுதி; அங்கே ஒரு நல்ல காரியத்துக்கு யாரையேனும் ஆட்செய்வது — யாரையேனும் தலைமைவகிக்கச் சொல்லியிருந்தால் அதைத் தாங்கலாகாதா? நீங்கள் என்ன — அவ்வளவு கறந்த பாலாகவா நடந்துகொண்டீர்கள்? இப்படி சொல்வதால், நான் தவறு செய்வேன் என்று யாரும் கருத வேண்டாம்; தவறு செய்யமாட்டேன்; அந்தக் கட்டம் வரும்வரை காத்திருக்கமாட்டேன்."

—சட்டமன்றத்தில் துணை மானிய நிதியொதுக்கல் மசோதா விவாதத்துக்குப் பதிலளிக்கையில்.

# இலங்கைத் தமிழருக்கு மறுவாழ்வு

## தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் — முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, ஆக. 19—

"இலங்கையிலிருந்து திரும்பி வருகிறவர்களுக்கு என்ன என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி கனம் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். பத்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதனால், இந்தக் காரியம், பத்து இலட்சம் ரூபாயில் முடிந்துவிடக்கூடியதாக எண்ணத் தேவையில்லை.

"அப்படிச் சிலர் கருதிக் கொண்டதன் காரணமாகத்தான், 'அவர்களுக்கு மலைக்காடுகளில் இடம் கொடுக்கவேண்டும்; தேயிலைத் தோட்டங்களில் இடம் கொடுக்கவேண்டும்; நீலகிரிப் பகுதியில் குடி அமர்த்த வேண்டும்' என்றெல்லாம் சொன்னார்கள்.

இவை அனைத்துமே பற்பல திட்டங்களாக உருவாக்கப்பட்டு — இந்திய அரசுககும் அனுப்பப்பட்டு — அவர்களது ஒப்புதலையும் பெற்று — இன்றைக்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

இந்தப் பத்து இலட்சம் என்பது, இலங்கையிலிருந்து வருகின்றவர்கள் ஏதாவது சிறு தொழில் நடத்த வேண்டுமென்று விரும்பினால், அவர்கள் அந்தத் தொழிலை நடத்துவதற்குக் கடன் உதவி அளிப்பதற்காக என்று மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையாகும்.

"அது தவிர, இலங்கையிலிருந்து வருகிறவர்களுக்காக நமது அரசு என்ன என்ன உதவிகளை அளித்து வருகிறது என்பதைத் தெரிந்துகொண்டால் பெரிதும் மகிழ்ச்சியடைவார்கள். அவை பற்றி அவ்வப்போது அரசு அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன.

"உயர்நிலை அதிகாரிகள் அந்தமான் தீவுக்குச் சென்று பத்து அல்லது பதினைந்தாயிரம ஏக்கர் நல்ல வளமான நில பகுதியை பார்த்து வந்து, அதை விவசாயம் செய்வதற்கு அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசுக்கும் சிபாரிசு செய்து— அவர்கள் அதைப் பரிசீலித்துப் பார்த்து—ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

'அதைப்போல் கூடலூர் (நீலகிரி) பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களில் அவர்களைக் குடியமர்த்தும் திட்டமும் அமுலில் இருக்கிறது. நீலகிரிப் பகுதியிலும் அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருக்கிறது.

"ஒவ்வொரு மாவட்டத்திலும் விளைச்சலுக்குப் பாங்கான நிலங்கள் என்ன என்ன என்பதைக் கணக்கிட்டு, அவைகளில் இலங்கையிலிருந்து வருகின்ற நல்ல விவசாயிகளை ஈடுபடச் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டு வருகின்றன.

"அதைப் பற்றிய முழு விவரங்களை நாம் அறிந்துகொள்வோமானால், செய்யப்பட்டிருக்கின்ற காரியங்களில், ரூ 10 இலட்சம் என்று இருப்பது, பட்டியலிலே ஒரே ஒரு விவரமே தவிர, முழு விவரமல்ல என்பதை உணருவார்கள் என்று கருதுகிறேன்."

—முதலமைச்சர் அண்ணா
(சட்டமன்றத்தில்)

# புதிய தொழில்கள் ஏற்படாமைக்கு யார் காரணம்?

## ஐந்தாண்டுத் திட்டத்தையும் நிறுத்திவிட்டு எங்களைக் குற்றஞ்சாட்டுவதா?

### எதிர்க்கட்சியினர் புகாருக்கு அண்ணா தரும் பதில்

சென்னை, ஆக. 20—

"இந்த அரசு பதவியேற்றது முதல் தொழில் வாய்ப்புகள் வளருவதில்லை என்று கூறப்படுகிறது. தொழில் வாய்ப்புகள் வளருவது ஐந்தாண்டுத் திட்டங்களோடு தொடர்புடையதாகவே இருந்துவந்துள்ளதைக் காணலாம். காங்கிரசுக் கட்சி ஆட்சி நடத்தியபோதும், 'மாநில அரசின் நிதியிலிருந்து—மாநில அரசின் தனித் தொழில்கள்' என்று எந்தப் பெரிய தொழிலையும் இங்கு துவக்கியதாகப் பட்டியல் இல்லை.

"நாம் ஏதாவது செய்திருக்கிறோம் என்றால் --- 'நாம்' என்று சொல்கிறேன் --- எதிர்க் கட்சியும் அரசின் ஓர் அங்கம் என்பதை உணர்ந்து --- தீக்குச்சித் தொழிற் தொழிற்சாலையும், காலணித் தயாரிப்புக் கூடமும், அப்பளத் தயாரிப்பு நிலையமும், இவை போன்ற சிறு தொழில்களைத்தான் துவங்கியிருக்கிறோம். ஆனால், ஐந்தாண்டுத் திட்ட வேலைகள் நின்றதும் --- நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும் பொருந்தி வந்தது. ஐந்தாண்டுத் திட்டங்கள் தாமதப்பட்டுள்ளன; இதற்கு யார் காரணம் --- மத்தியில் ஆட்சி செய்யும் காங்கிரசேயாகும்"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில், துணை மானியங்களுக்கான நிதி ஒதுக்கல் மசோதாமீது நடந்த விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசுகையில் குற்றஞ்சாட்டினார்.

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில் இத் தொடர்பில் மேலும் கூறியதாவது:—

"நிலைமை இப்படி இருக்கையில், எங்களைப் பார்த்து, 'தொழில்கள் வளரவில்லை' என்று கேட்பது, ஒரு நீதிமன்றக் கதையைத்தான் என் நினைவுக்குக் கொண்டுவருகிறது.

ஒருவன் -- வெறியில் -- தன் தாய், தந்தை இருவரையும் வெட்டிக் கொன்று விட்டான்; நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது; நீதிபதி தன் தீர்ப்பைக் கூறுகிற கட்டம் வந்தபோது, 'ஐயோ; நான் தாய் தந்தையற்ற அனாதை; என்னைக் கொன்றுவிடாதீர்கள்' என்று அலறினானாம்!

இருந்த ஒரே தாயையும்கொன்றுவிட்டுத் தன்னை அனாதை என்று கூறியவனைப்போல்-- ஐந்தாண்டு திட்டங்களைக் கொன்றுவிட்டுக் காங்கிரசார், இந்த அரசைப் பார்த்து, 'தொழில் வளரவில்லை' என்கிறார்கள்!

இருந்தாலும், இம்மாநிலத்தில் பெருந் தொழில்கள் ஏற்பட இந்த அரசு தக்கது செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு சில தொழில்களுக்கு அடிப்படையாக அமையக்கூடிய மணலி எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலைப் பகுதியில் குடிநீர் கிடைக்கச் செய்வதற்காக ரூ. 82 இலட்சம் இந்த துணை மானியக் கோரிக்கையில் சேர்த்துள்ளோம்.

பல தொழில் பள்ளிகளுக்கு மானியம் வழங்கவும் நிதி ஒதுக்கம் செய்துள்ளோம். இப்போது இந்தப் பள்ளிகளில் சேர மிகுந்த தயக்கம் காட்டப்படுகின்றன. அதற்குக் காரணம் என்ன? எங்கள் ஊரில் இத்தகைய பள்ளியைத் திறந்த போது ஆர். வெங்கடராமன் ஒன்றைச் சொன்னார். 'இதில் படிப்பது, எல்லோரும் வேலை தேடிப்போக அல்ல; சொந்தத்தில் தொழில் நடத்த' என்று!

**ஆனால், இந்தப் பலதொழில் பள்ளிகள் ஆரம்பித்த நாள் முதலாய் இன்றுவரை இவற்றில் தேறிவருகிறவர்களுக்கு வேலை தேடிச் செல்வதில் நாட்டம் இருக்கிறதே தவிர, சொந்தத்தில் தொழில் நடத்துவதில் நாட்டம் இல்லை.**

**இப்பவும் இத்தகையோர் தொழில் நடத்த விரும்பி அரசை அணுகுவார்களானால், அவர்களது திட்டங்களை ஆராய்ந்து அரசு, தக்க உதவிகளை வழங்கிடும்.''**

## தி. மா. மு. க. மாணவர்கள் வெற்றி

மதுரையில் உள்ள கல்லூரிகளின் தேர்தல்களில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாணவர்கள் மிக அதிகமான வாக்கு வேறுபாட்டில் தேசிய மாணவர்களை முறியடித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்; விவரம் வருமாறு:—

**மதுரைக் கல்லூரி:—**

பொதுச் செயலாளர்: மருதவிநாயகம், துணைச்செயலாளர்: பெரியசாமி

**தியாகராசர் கல்லூரி:—**

பேரவைத் தலைவர்: கு. பழனிச்சாமி; செயலாளர்: ம. வே. செகநாதன்; துணைச்செயலாளர்: மு. கிருட்டிணன்; இளங்கோ மன்றத் தலைவர்: தேவேந்திரன்.

**அமெரிக்கன் கல்லூரி:—**

திருவள்ளுவர் கழக அமைச்சர்: செவத்தையா; விடுதிச் செயலாளர்: இரவீந்திரன்.

'வெற்றி பெறச்செய்த மாணவ நண்பர்களுக்கு — தி. மா. மு. க. சார்பில்-மகிழ்ச்சியுடன் நன்றியை வழங்குகிறேன்'' என தென் மாவட்ட தி. மா. மு. க. பொறுப்பாளர் கா. காளிமுத்து பி.ஏ., அறிவிக்கிறார்.

## கொற்கைத் துறைமுகத்தில் அகழ்வாராய்ச்சி

### தமிழகத் தொல்பொருள் துறையினர் முயற்சி

சென்னை, ஆக. 22—

தமிழக ஆராய்ச்சியின் தொல்பொருள் ஆய்வுத் துறையினர், பாண்டியர் காலத்துப் பண்டைத் துறைமுகம் இருந்த கொற்கையில் அகழ்வாராய்ச்சி செய்ய முன்வந்துள்ளனர்.

இந்த அகழ்வாராய்ச்சி இன்னும் சில நாட்களில், தமிழகத் தொல்பொருள் துறை இயக்குநர், திரு. நாகசாமி தலைமையில் தொடங்கும்.

சங்க காலத்தில் தமிழகத்திற்கும் மேலை நாடுகளுக்கும் இடையே நடந்த வாணிபப் போக்குவரத்துக்கு, கொற்கை முக்கியத் துறைமுகமாகத் திகழ்ந்தது.

தமிழ் இலக்கியங்களிலும், மேலை நாட்டார் குறிப்புக்களிலும் கொற்கை பற்றிக் குறிப்பிடப் பட்டிருப்பதுடன், இன்றும், கொற்கையில் பண்டைய நாணயங்களும், பானை ஓடுகளும், வளையல் அறுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சங்குகளும், பூமிக்கடியில் புதைந்து கிடப்பதற்கான ஆதாரங்கள் தெரிகின்றன.

இந்த அகழ்வாராய்ச்சி முடிவில் கொற்கையின் வரலாற்றுக்கும் தமிழகத்தின் வரலாற்றுக்கும் பல ஆதாரங்கள் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

### கட்டபொம்மன் கோட்டை

தொல்பொருள் துறையினர் பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள கட்டபொம்மன் கோட்டையையும் ஆராயவிருக்கின்றனர்.

கட்டபொம்மன் கோட்டையை மறைத்திருக்கும் புதர்களை அழித்து, வெளிக்கொணர்ந்து பழுது பார்த்து, பாதுகாக்க ஏற்பாடு செய்துவருகின்றனர்.

## 'அரசுக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்க'

### தொழிலதிபர்களுக்கு முதலமைச்சர் அண்ணா வேண்டுகோள்

சென்னை, ஆக. 20—

தமிழக அரசு வெளியிட்டுள்ள கடன் பத்திரங்களில் பெருமளவு முதலீடு செய்யுமாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஓய்வுகால வாழ்க்கை உதவி நிதி முதலீட்டில் செய்யப்பட்டுள்ள மாறுதலைத் தொழிலதிபர்கள் பயன்படுத்திக்கொண்டு அதைப் பெருமளவுக்கு அரசுக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யுமாறு அண்ணா அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இராஜாஜி மண்டபத்தில் பாங்கர்கள், தொழிலதிபர்கள் அடங்கிய கூட்டமொன்றில் அண்ணா அவர்கள் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:—

"தமிழக அரசு, மிகவும் சாமர்த்தியமாகவே நிதியைச் செலவிடுகிறது.

1967–68 முடிய தமிழக அரசு விசைத் திட்டங்களில் ரூ. 315 கோடியும், பாசனத் திட்டங்களில் ரூ 119 கோடியும், கட்டிடம் மற்றும் முதலீட்டுச் செலவுகளில் ரூ. 152 கோடியும் முதலீடு செய்துள்ளது.

உள்ளாட்சி மன்றங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் விவசாயிகட்கு ரூ. 123 கோடி வரை கடன் கொடுத்துள்ளோம்; இதற்கு நேர்மையான வட்டி கிடைத்து வருகிறது.

**இந்தியாவிலேயே இந்த மாநிலத்தில்தான் வசூலாக வேண்டிய கடன் பாக்கித் தொகையின் மதிப்பு மிகக் குறைவாக உள்ளது. வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி வசதி தேடுவதில் தமிழக அரசு சுணக்கம் காட்டவில்லை.''**

## புதுமுக வகுப்பில் இன்னும் காலியாக உள்ள இடங்கள்

### பெண்களைச் சேர்த்துக்கொள்ள அரசு பரிந்துரை

### பல்கலைக் கழகமே இறுதி முடிவு செய்யும்

சென்னை, ஆக. 19—

"புகுமுக வகுப்பைப் பொறுத்தவரையில், ஆண்கள் படிக்கும் கல்லூரிகளில் பெண்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று பல்கலைக் கழக துணைவேந்தர் கூறியிருக்கிறார். ஆயினும், சில ஆண்கள் கல்லூரிகளில் இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதை முன்னிட்டு அந்த இடங்களில் பெண்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று பல்கலைக் கழகத்திற்குக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது"

என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது கூறினார்.

இதுபற்றி முடிவு செய்யவேண்டியவர்கள் பல்கலைக் கழக அதிகாரிகள்தான் என்றும், அரசு இதுபற்றி திட்டவட்டமான முடிவு எடுப்பதற்கில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

புதுக்கோட்டையில் உள்ள ஆண்கள் கல்லூரி ஒன்றில், புகுமுக வகுப்பில் 52 இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி, 'அந்த இடங்களில் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா?' என்று திரு. இராமச்சந்திர துரை கேட்டார்.

"பி.ஏ., பி.எஸ்சி. வகுப்பில் ஆண்களோடு பெண்களும்சேர்ந்து படிக்கப் பல்கலைக்கழகம் இணங்கினாலும், புகுமுக வகுப்பில் அவ்வாறு சேர்ந்து படிக்க ஒப்பவில்லை'' என்று கல்வியமைச்சர் கூறினார்.

'1967–68-ல் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் புதிதாக 56,006 மாணவர்கள் சேர்ந்தனர்; இவர்களில் 35,691 மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டது''

என்றும் மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கல்வியமைச்சர் கூறினார்.

ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி அளிப்பதாகக் காங்கிரசு அரசு உறுதியளித்திருந்ததை திரு. கே. விநாயகம் (காங்) கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, முதலமைச்சர் அண்ணா குறுக்கிட்டு 'கொடுக்க வசதியுள்ளவர்களுக்குச் சலுகை தருவது சமூக நீதி ஆகாது' என்றார்.

## நாமக்கல் வட்ட தி. மா. மு. க.

"நாமக்கல் வட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் தொடக்க விழா செப்டம்பர் 2-வது வாரத்தில் சட்டத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்கள்; எனவே நாமக்கல் வட்டத்திலுள்ள எல்லாக் கல்வி நிலையங்களிலும் தி. மா. மு. க. அமைப்பை நிறுவும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்''

என்று தி மா. மு. க. அமைப்பாளர் புலவர் மு. சி. இராமசாமி அறிவிக்கிறார்.

## ஓசூர் வட்ட தி. மு. க. தேர்தல்

தருமபுரி மாவட்டம் ஓசூர் வட்ட தி. மு. கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அவைத் தலைவர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், மாவட்டப் பிரதிநிதிகள் இரண்டுபேர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் 25-8-68 காலை 10-மணிக்கு ஓசூர் பயணிகள் விடுதியில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## ஓசூர் வட்டப் பிரதிநிதிகட்கு

### அறிவிப்பு

ஓசூர் வட்ட தி. மு. கழகத்திற்குத் தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்புகளுக்காக 25-8-68 ஆம் நாள் காலை 10-மணிக்கு ஓசூர் பயணிகள் விடுதியில் நடைபெறவிருக்கும் தேர்தலின்போது, ஓசூர் வட்ட தி. மு. க. பிரதிநிதிகள் ஏற்கனவே தங்கள் தங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் பிரதிநிதிச் சீட்டைக் காண்பித்தே தேர்தல் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்பதும், 25-ஆம் நாள் தேர்தலுக்காகத் தனியாகப் பிரதிநிதிச் சீட்டுகள் அனுப்பப்படவில்லை என்பதும் தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## விழுப்புரம் வட்ட தி.மு.க. தேர்தல்

14—8—68 'நம் நாடு' இதழில், விழுப்புரம் வட்ட தி.மு.க. தேர்தல் சம்பந்தமாக வெளியிடப்பட்ட அறிவிப்பினைக் கீழ்க்கண்டவாறு திருத்தி அறிவிக்கப்படுகிறது:—

"தெ. ஆ. மாவட்டம் விழுப்புரம் வட்ட தி. மு. கழகத்தின் அவைத் தலைவர் பொறுப்பு தவிர, மற்ற எல்லாப் பொறுப்புகளுக்குமான தேர்தல்கள், 1—9—68 ஞாயிறு காலை 10 மணிக்கு, விழுப்புரம் முனிசிபல் பயணியர் விடுதியில் நடைபெறும்; தேர்தல் ஆணையாளர்: சா. கணேசன் எம்.சி.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## பெங்களூர் தமிழ் எழுத்தாளர் மன்றம்

### அண்ணா மணிவிழா மலர் வெளியிட முடிவு

பெங்களூரில் தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் சார்பில், அறிஞர் அண்ணா அவர்களின் அறுபதாவது ஆண்டு மணிவிழா மலர் வெளியிடுவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன.

மணிவிழா மூலம், மன்றத் துவக்க விழாவினையும் சிறப்பாகக் கொண்டாட மன்றம் முடிவு செய்துள்ளது.

அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளன்று இசை நிகழ்ச்சியுடன் மலர் வெளியிட—மணிவிழா மலர் முழுப் பொறுப்பினையும் கோ. மு. தமிழரசு ஏற்றுக்கொண்டுள்ளார்.

## சேலம் மாவட்ட தி. மு. க. தேர்தல்

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி சேலம் மாவட்ட தி. மு. க. தேர்தல் 25—8—68 ஞாயிறு காலை 10 மணிக்கு சி. சிட்டிபாபு எம்.பி. அவர்களை ஆணையாளராகக் கொண்டு சேலம் நகர் விசயராகவாச்சாரியார் திடலில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

# இந்திச் சொல் நீக்கப்படும் வரை என்.சி.சி. இல்லை

## மத்திய அரசின் பதிலைப் பொறுத்தே மறுநடவடிக்கை

### சட்டமன்றத்தில் அண்ணா, நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஆக. 21—

"தமிழகத்தின் தேசிய மாணவர் படையின் (என்.சி.சி.) எதிர் காலம் பற்றி எந்தவிதமான உறுதிமொழியும் அளிப்பதற்கு இல்லை"

என்று சட்டமன்றத்தில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறினர்.

"இந்த மாநிலத்தில் என். சி. சி.-யை மீண்டும் ஆரம்பிப்பது, தமிழக அரசின் கடிதத்திற்கு இந்திய அரசிடமிருந்து வரும் மறுமொழியைப் பொறுத்தது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"மத்திய அரசுடன் நடத்திவரும் கடிதப் போக்குவரத்தின் முடிவு என்னவாக இருக்கும் என்று திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை" என்றும் அவர் சொன்னர்.

"இப்பிரச்சினை குறித்துத் தமிழக அரசின் நிலை தர்க்கரீதியானது---சட்ட ரீதியானது--ஒப்புக் கொள்ளக்கூடியது" என்று அவர் கூறினர்.

தமிழகத்தில் என்.சி.சி. படை நீக்கப்பட்டுள்ளது பற்றி டாக்டர் ஹாண்டேயும், கோமதி சங்கர தீட்சதரும் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தனர்.

அதற்குக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பதிலளித்து வாசித்த அறிக்கையில், 'இந்தி ஆணைச் சொற்களைப் பயன்படுத்துவதைக் கைவிடாவிட்டால், என். சி. சி.-யைத் தமிழ்நாட்டில் கைவிட நேரும் என்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பதற்கு இன்னும் பதில் வரவில்லை' என்றார்.

# மொழிப் பயிற்சிக்கான நேரம் குறைக்கப்படுமா?

## 74 பள்ளிகளில் பிற மொழிக் கல்வி

### அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஆக. 21—

"மற்ற மாநிலங்களில் உள்ளதைப்போல தமிழ் நாட்டிலும் மொழிப் பயிற்சிக்கான 'பீரியடு'களைக் குறைத்து, விஞ்ஞானம், கணக்கு ஆகியவற்றிற்கான 'பீரியடு'களை அதிகரிக்க உத்தேசமுண்டா?"

என்று சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சர் இரா நெடுஞ்செழியன் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"தலைமை ஆசிரியர்களை கலந்தாலோசித்த பிறகு தமிழுக்கு, 7 பீரியடுகள்; ஆங்கிலத்துக்கு 7; கணக்குக்கு 6; விஞ்ஞானத்திற்கு 7—என்று நிர்ணயிக்கப்பட்டது.

"மொழிகளுக்கான 'பீரியடு'களைக் குறைக்கக் கல்வியாளர்கள் விரும்பினல் அதற்கு அரசு தடையாக இருக்காது"

மற்றும் துணைக் கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"ஆங்கிலம், தமிழ் நீங்கலாக மற்ற மொழிகளுக்கெனத் தனிப் பிரிவுகள் 74 பள்ளிகளில் உள்ளன; இந்தி உட்பட 7 அல்லது 8 மொழிகள் கற்பிக்கப்படுகின்றன (குறைந்தபட்சம் 15 மாணவர்கள் இருந்தால்); சம்ஸ்கிருதம், அராபிக் முதலிய பண்டைய மொழிகளைக் கற்பிக்கவும் ஆலோசிக்கப்படுகிறது."

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அமெரிக்க அதிபர் ஜான்சன்கூட, இதே பாணியில் இப்போதைய இரஷ்ய நடவடிக்கையினை,

**"செக் நாட்டில் அனுமதிக்கப்படும் புதிய உரிமைகள், 'சோவியத் நாட்டுக்கு ஆபத்து' என்பது, கம்யூனிச அமைப்பின் அவலமான நிலைமையினைத்தான் காட்டுகிறது"**

என விவரித்திருப்பது, பொருத்தமான மதிப்பீடே ஆகும்!

வெள்ளரிப் பழத்தின் உருவம் உடைபடுவதனை, பூண்போட்டுத் தடுத்து நிறுத்திவிட முடியாது!

'இரும்பு மனிதர்' எனக் கூறப்பட்ட ஸ்டாலின் காலத்திலேயே, இரஷ்யக் கட்டினின்றும் பிரிட்டு வேறுபட்டுவந்த யூகோஸ்லேவியாவினை எவரால் தடுத்து நிறுத்திட முடிந்தது?

'கம்யூனிசக் கூட்டு உடைபடக் கூடாது' என அண்மையில் வார்சா நாடுகள் இரஷ்யாவின் முயற்சியால் கூடிப் பேசியதனை, நூற்றுக்கு நூறு எவரும் எதிர்க்கவில்லை --- சந்தேகிக்க வில்லை!

ஆனல், 'கம்யூனிசக் கூட்டின் உறுப்பு நாடுகள், சோஷலிசச் சித்தாந்தத்தை அடைவதற்காகத் தங்களுக்குள் கடைபிடிக்க விரும்பும் சுயேச்சையான போக்குக்கு இரஷ்யா போன்ற தலைமைப்பீடங்கள் குறுக்கே நிற்கக்கூடாது' என அண்மையில் உருவான முடிவினையும் மீறிக் கொண்டு இரஷ்யா நடத்தியிருக்கும் இந்த ஆக்கிரமிப்பு, உலக நாடுகளிலிருந்து மட்டுமல்ல --- கம்யூனிச நாடுகளிலிருந்து --- பிற நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகளிலிருந்தும் ஒருமித்த கண்டனத்தைக் கிளப்பியிருப்பதனை மாஸ்கோ உணரவேண்டும்.

உலகப் படத்தில் தேடிப் பார்த்தால் மட்டுமே தெரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு இருக்கும் அல்பேனியா, சில ஆண்டுகளுக்கு முன்னல் கம்யூனிசத் தலைமையை ஆட்டி அலைக்கழித்த கதையினை, இரஷ்யா இதற்குள் மறந்திருக்க நியாயமில்லை!

**"நாடுகளுக்கிடையே என்னதான் கூட்டு ஒப்பந்தங்கள் இருந்தாலும்,**

**மதம் --- தத்துவம்**

**என்ற இரண்டின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஒன்றின் உள்விவகாரங்களில் மற்ரென்று தலையிடுவது — ஆக்கிரமிப்பு நடத்துவது என்பது, எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று"** என இந்தியத் தலைமையமைச்சர், இந்த நிகழ்ச்சி பற்றித் தெரிவித்திருக்கும் கருத்தினை இங்கு வலியுறுத்துவது அவசியமாகிறது.

**"முன்னேற்றக் கருத்துக்களுக்காக செஞ்சினைவையும் பகைத்துக்கொண்ட சோவியத் யூனியன்—**

**"பரந்துவிரிந்த விண்வெளியில் சாதனைகள் படைப்பதனல், அரசியல் போக்கும், பரந்து விரிந்த மனப்பான்மையில் மாறிக் கொண்டுவருகிறது" எனப் பார்வையாளர்கள் நம்பிய இரஷ்யா—**

மீண்டும் ஏன் பழைய பாதையில்--இரும்புத் திரை மறைவில்--எடுத்து அடி வைக்கிறது என்பது, இனம் புரியாத வேதனையைத்தான் நடுநிலையாளர்களுக்கு ஏற்படுத்துகிறது!

"பாறையில் மோதுவதால் பலன் ஏதும் ஏற்படாது; ஆயுதம் கொண்டு எதிர்த்துப் போராட வேண்டாம்; அமைதியான முறையில் ஆக்கிரமிப்புக்கு மறுப்புக் காட்டுங்கள்" என செக் நாட்டுத் தலைமை, தனது குடிமக்களுக்கு இட்டிருக்கும் கட்டளை, இத்தருணத்தில் அது கடைபிடிக்கும் விவேகத்துக்குச் சான்று பகருவதாக இருக்கிறது!

கட்சி அளவில்--நிர்வாக முறையில் தான் ஏற்படுத்த இருக்கும் முன்னேற்றமான சீர்திருத்தங்கள்தான், இரஷ்யத் தலைமையை உறுத்தி--அதன்மூலம் ஆக்கிரமிப்பினை ஏற்படுத்தியிருக்கிறது என்பதனை நிலைநிறுத்திக்காட்ட, செக் மக்களின் ஒருமித்த எதிர்ப்பு நடவடிக்கைகள், உலகின் கண்களுக்கு, 'உண்மை நிலை என்ன' என்பதனைக் காட்ட உதவும்.

இரஷ்யாவிடம் கொண்டுள்ள விரோதத்தால், செக் நாட்டின் கணிசமான பகுதியினர், 'மேற்கு நாடுகளிடம் உதவி கேட்டால்தான் என்ன' என்று ஓர் எண்ணம் கொண்டிருப்பதாகச் செய்தியொன்று கூறுகிறது.

"யுகோசுலேவியா, ருமேனிய நாட்டுத் தலைவர்கள், அண்மையில் செக்கோசுலேவேகியாவில் பெற்ற மகத்தான வரவேற்புதான், மாஸ்கோவுக்கு இப்படி ஒரு திடீர் கோபத்தை உருவாக்கியிருக்கக் கூடுமோ" என்றுகூடச் சிலர் யூகிக்கின்றனர்.

இந்த அடிப்படையில் பார்த்தால், இரஷ்யாவின் நடவடிக்கை, உலக நாடுகளையேகூட ஒரு உலுக்கு உலுக்கினலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

**படை பலத்துக்குப் பஞ்சமில்லாத இரஷ்யாவே நான்கு நாடுகளைச் சேர்த்துக்கொண்டு, போர்ச் சகதியில் இறங்கியிருக்கும்போது, பாதுகாப்பினைத் தேடிக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும் 'செக்' நாடு, உதவிக்கு அபாயக் குரல் எழுப்பாது -- எழுப்பக்கூடாது என நினைப்பதில் -- எதிர்பார்ப்பதில் நியாயம் இருக்க முடியாதல்லவா?**

—எஸ். ஆர்.

# மண்வாரி இயந்திரத் தொழிற்சாலை

## தமிழகத்தில் அமையும்

### 5,520-பேருக்கு வேலைவாய்ப்பு

"செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திருவள்ளூர் தாலுகாவில் சுமார் ரூ. 10-கோடி செலவில் மண் வாரும் இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அமெரிக்க ஜெனரல் மோட்டார் நிறுவனத்தின் உதவியுடன் நிறுவ மத்திய அரசு, 1966 ஏப்ரலில் இந்துஸ்தான மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு லைசென்சு வழங்கியிருக்கிறது"

என்று தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

"இந்தத் தொழிற்சாலையில் ஊரும் இயந்திரக் கலப்பைகள், மண் குவிக்கும் வண்டிகள், விசை ஏணிகள், மும்முனைச் சுமையேற்றி ஆகியவை தயாரிக்கப்படும்; இவைகளின் உற்பத்தித் திறன் ஒன்றுக்கு முறையே 240; 240; 100; 50 ஆக இருக்கும்.

தொழிற்சாலையின் மூலதனம்—நிலத்தின் மதிப்பு உட்பட—ரூ. 9.10 கோடியாக இருக்கும்; 2,520 தொழிலாளர்களுக்கு இதில் வேலை வாய்ப்பு இருக்கும்.

# சென்னையில் அமைச்சர் முத்துசாமி

சென்னை, ஆக. 21—

சோவியத் மற்றும் மேலை நாடுகளுக்குச் சென்று திரும்பிய தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கட்கும் மாநகராட்சி தி.மு.க. கட்சித் தலைவர் வி. முனுசாமிக்கும் இன்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

டெல்லி சென்றிருந்த பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும் உடன் வந்தார்.

வேளாண்மைத் துறையமைச்சர் கோவிந்தசாமி, கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., சென்னை மாவட்டச் செயலாளர் நீல நாராயணன், மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி., மேயர் அபியுல்லா பேக், துணைமேயர் பவளவண்ணன் ஆகியோர் விமான நிலையத்திற்கு வந்திருந்து மாலையணிவித்து வரவேற்றனர்.

மற்றும் சட்டமன்ற — மாநகராட்சியின் உறுப்பினர்களும், ஏராளமான கழக தோழர்களும் வந்திருந்து மாலையணிவித்து வரவேற்றனர்.

# வேலையிழந்த ஆலைத் தொழிலாளர்கட்கு உதவி

## முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 2,05,000

சென்னை, ஆக. 21—

"கோவையின், வேலையிழந்த தொழிலாளர் நிதிக்கு அரசு ரூ. 2,05,000 முதலமைச்சர் நிதியிலிருந்து தரப்பட்டிருக்கிறது"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன் இன்று சட்டமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இதையொட்டிய சில துணைக் கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"வேலையிலிருந்து--பின்னர் அந்த வேலையை இழந்துவிட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்க இந்த அரசு மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறது. ஆலைகள் திறக்கப்படும் வரை தொழிலாளர்களுக்கு இந்த உதவி நிதி தரப்படும்.

எப்போதுமே தொடர்ந்து நிதி உதவி தருவதாக ஒப்புக்கொள்ளப்படவில்லை.

"பஞ்சாலைச் சிக்கல் ஏற்பட்ட போதும்--- அவசியம் ஏற்பட்ட பொழுதெல்லாம் காலந்தாழ்த்தாது முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, மிக விரைவாக நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார்கள்."

# சேலம் மாவட்ட தி. மு. க. தேர்தல்

25—8—68-ஆம் நாள் காலை 10-மணிக்கு சேலம் நகர் விசய ராகவாச்சாரியார் திடலில் நடைபெறுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த சேலம் மாவட்ட தி. மு. க. தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் நடைபெறும் நாள் விரைவில் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## நன்கொடையாகப்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யில் 'பேட்ரியாட்' இதழ் மட்டும் ரூ. 5,69,743 பெற்றிருக்கிறது. 'லிங்க்' இதழ் மட்டும் 1960-ல் ரூ. 12,000-மும், 1962-ல் ரூ. 90,000-மும் பெற்றிருக்கிறது.

இத்தொகை பின்னர், 1965-66-ல் 'பேட்ரியாட்' இதழ் பெயருக்கு மாற்றப்பட்டது.

'லிங்க்' இதழ், 1964-ம் ஆண்டில் ரூ. 1,96,500-மும்; 1965-ல் ரூ. 1,00,000-மும் நன்கொடை பெற்றிருக்கிறது.

'பேட்ரியாட்' — 'லிங்க்' ஆகிய இரண்டு ஏடுகளும், காங்கிரசுக் காரர்களின் ஆதரவோடு, காங்கிரசுக் கட்சி சார்பான ஏடுகளாகவே துவக்கப்பட்டு நடந்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னை 60-வதுவட்ட தோழர்கட்கு:

சென்னை 60-வது வட்ட (புதிய 78-வது வட்டம்) தி. மு. க அவசரப் பொது உறுப்பினர் கூட்டம், அறிஞர் அண்ணா அவர்கள் மணிவிழாவினைச் சிறப்பான முறையில் கொண்டாடுவது பற்றி ஆலோசிக்க 24—8—68 இரவு 9 மணியளவில், எண் 1/149, கே. எஸ். ஆர்ட்ஸ், லாயிட்ஸ் ரோடில் நடைபெறும்; உறுப்பினர்கள் தவறுமல் கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் கே. எஸ். தங்கவேலு கேட்டுக் கொள்கிறர்.

## நடக்க இருப்பவை

### 23--8--68

**சென்னை(புதிய) 16-வது வட்டம்**

எம்.ஜி.ஆர். இலவச இரவுப் பள்ளி சார்பில் மாலை 7 மணிக்கு பிடாரியார் கோயில் தெருவில் (பிரபாத் டாக்கீசுக்கு அருகில்); தலைவர்: எஸ். எம். தேவதாசு; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, புலவர் பொன்னிவளவன், துரை முருகன், எஸ். கே. லிங்கம், கே. பொன்னுசாமி, பாண்டுரங்கன், மற்றும் பலர்.

## அறிவிப்பு

"இன்றைய 'நம் நாடு' இதழின் சில பதிப்புகளில் (3-ஆம் பக்கம்), சேலம் மாவட்ட தி. மு. க. தேர்தல்பற்றி வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு தவறுதலாக வெளிவந்துவிட்டது; அது பற்றிய புதிய அறிவிப்பு இதே பக்கத்தில் பிறிதோரிடத்தில் வெளியாகியிருக்கிறது."

## சென்னை 27-வதுவட்ட தோழர்கட்கு:

பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்த நாள் விழாவினைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாட வேண்டி, சென்னை 27-வது வட்ட (புதிய 30-வது வட்டம்) 24—8—68 இரவு 9-மணிக்கு திருவள்ளுவர் முன்னேற்றக் கழகத்தில் (எண் 46, பெ. கோ. தோட்டத் தெரு) ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்; கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், துணைமன்ற—சார்பு மன்றத் தோழர்கள் அனைவரும் வருகை தருமாறு கிளைக் கழகச் செயலாளர் ஆர். சந்திரன் கேட்டுக் கொள்கிறர்.

## பாலர் அரங்கம்

ஆகஸ்டு 23, 24, 25 தேதிகளில் மாலை 4 மணிக்கு

'காப்டன் சிந்துபாத்'

(எம்.ஜி.எம். கலர் படம்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிவகம் அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பட்டது.